# மேஜர். சுரேந்திரன்

## சிறீபாஸ்கரன் - முருகாபுரி (20.10.62 - 26.09.88)

அன்றைய காலைப்பொழுது மிகவும் அமைதியாக மலர்கின்றது. அமைதிக்குப் பின் ஆபத்து ஏதும் உண்டு என்பது நியதி. எமது தோழர்கள் அன்று இரவு நிகழப் போகும் அதிர்ச்சியையும் சோகத்தையும் அறியாதவர்களாய் தமது பாசறைகளில் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த மோதலில் 2–வது லெப்டினனட் ராமுவின் வீரமரணத்தால் பாதிக்கப்பட்டு சோக மயமாகக் காணப்பட்டனர். ஆனால் அவர்களின் செயல்களில் உறுதி மேலோங்கி நின்றது! ராமுவின் வீரமரணத்தை ஈடுசெய்வதற்காக, வீரமரணத்திற்குக் காரணமாயிருந்த IPKF இனரைப் பழிவாங்க சுரேந்திரன் திட்டமிட்டான். 26.09.88 அன்று சுரேந்திரன் தலைமையில் நான்கு பிரிவுகளாக எமது தோழர்கள் புறப்பட்டனர். அதில் ஒரு பிரிவுக்கு சுரேந்திரன் தலைமை தாங்கினான். ஆனால், அதில் வீரமரணத்தைத் தழுவுவான் என்று யாரும் நினைக்கவில்லை! ஆம், அந்தச் சோகமயமான நிகழ்ச்சி அன்று இரவு (26.09.88) நடந்துவிட்டது. தனது தோழர்களை அழைத்துக் கொண்டு கலப்பையாற்றை நோக்கி விரைந்தான். அங்கே எமது தோழன் சுரேந்திரன் மிகவும் வீரத்துடன் சளைக்காமல் போராடி தன் உயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்தான். தமிழீழ மண்ணை தனது செங்குருதியால் நனைத்தான். ஆனால் அவன் உடல் மட்டுமே எம்மைவிட்டுச் சென்றது.

அவனுடைய நினைவுகள் எம்முடனேயே உலாவருகின்றன. அவன் விட்டுச் சென்ற பாதச்சுவடுகளைப் பின் தொடர்கின்றோம். அவனுடைய இழப்பை ஈடுசெய்ய முடியாது. அவனுடன் இருந்த தோழர்கள் யாவரும் கதறி அழுதனர். சுரேந்திரன் போர்த் தலைவனாக நடந்ததில்லை. நண்பனுக்கு நண்பனாக, சகோதரனாக எல்லோருடனும் பழகினான். அவன் அன்பு எல்லோர் மனதிலும் நிறைந்திருந்தது. அவன் தன் வீரமரணத்திலும் காவியம் படைத்தான். அவன் கலப்பையாறு கடைசி மோதலில் (26.09.88) பங்குபற்றி புதிய அத்தியாயம் படைத்துவிட்டுச் சென்றான். அவனுடைய வீரமரணத்தின் போது முதன் முதலாக திருகோணமலையில் IPKF உடனான நேரடி மோதலில் ஆயுதங்களைக் கைப்பற்றினோம். SLR-2, SMG-1, கண்ணிவெடி கண்டுபிடிக்கும் கருவி–1 மற்றும் ரவைகள் ஆகியன அங்கு கைப்பற்றப்பட்டன.

திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறீபாஸ்கர் என்ற இயற்பெயரைக் கொண்ட சுரேந்திரன் தன்னுடைய பள்ளிப் படிப்பு முதல் தமிழீழத்திற்காக தன்னுடைய பங்களிப்பை அர்ப்பணித்த வன். 1977 கலவரத்தின் போது தன்னுடைய வீட்டை இழந்து இருக்க இடமில்லாமல் ஒவ்வொரு இடமாகச் சுற்றித் திரிந்தவன்.

திருமலையில் தொடர்ந்து நடந்த வன்முறைச் சம்பவங்களால், தமிழின ஒடுக்குமுறையாளர்களாகிய சிறிலங்கா அரசினால் ஏற்பட்ட வெறுப்பினால் சுதந்திரத் தமிழீழம் ஒன்றேதான் எதிர்காலச் சந்ததிக்கு வழி என்று எண்ணிய சிறீபாஸ்கர், 1983–ம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்துகொண்டான். பின் தன் பயிற்சியை முடித்துக் கொண்டு சுரேந்திரன் என்ற பெயருள்ள வேங்கையாக நீண்டகாலப் போராட்டத்திற்கு தன்னைத் தயார்படுத்திக் கொண்டு களத்தில் இறங்கினான். தமிழீழ விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த சுரேந்திரன் முதல் தடவையாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சிக்கென வருபவர்களைப் பாதுகாப்பாக அழைத்து வருவதில் ஈடுபட்டான். பின் வடமராட்சியில் கப்டன் ரஞ்சன் லாலா (வீரமரணம் அடைந்த மத்திய குழு



உறுப்பினர்) உடன் பணிபுரிந்தான். இவன் தனித் தோற்றத்தினால் சிங்களவன் என்று பட்டப்பெயரால் எல்லோராலும் அழைக் கப்பட்டான். சுரேந்திரன் என்றால் தெரியாதவர்கள் கூட சிங்களவன் என்றால் அவரா என்று சொல்கிற அளவிற்கு அன்புடனும், குழந்தை போன்றும் எல்லோருடனும் பழகிவந்தான். அந்த நாட்களில் ரஞ்சன் லாலாவுடன் தமிழீழத்தின் துரோகிகளுக்கு மரணதண்டனை வழங்குவதில் அவன் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

கப்டன் பண்டிதர் (மத்திய குழு உறுப்பினர்) 1984–ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் அட்டகாசம் புரிந்த சிறீலங்கா கடற்படையினரைத் தாக்கி 7 ஆயுதங்களை கைப்பற்றிய நிகழ்விலும் சுரேந்திரன் பங்கு குறிப்பிடத்தக்கது.

மற்றும் அக்காலகட்டத்தில் நடந்த பல தாக்குதல்களிலும் இவன் பங்கு பற்றினான்.

ஒரு முறை சிங்களவன் என இவனை எண்ணிய தமிழ் மக்கள் பிடித்துவிட்டனர். பின்னர் எம்மவர்கள் சென்று அழைத்து வந்தனர். இவனைப் பார்த்து எவருமே தமிழன் என்று சொல்லமாட்டார்கள். வடமராட்சியில் நின்ற சுரேந்திரன், வீரமரணமடைந்த லெப். கேர்ணல் சந்தோசம் மாஸ்டருடன் தன்னுடைய சொந்த மண்ணுக்குப் புறப்பட்டான். அங்கும் அவன் தமிழீழப் பணிகளைச் சளைக்காமல் செவ்வனவே புரிந்தான். ஆபத்தான வேளையிலும் அவனிடம் பதட்டம் இருக்காது. நிதானமாகச் செயற்படுவான். ஆபத் தென்றாலும், குதூகலம் என்றாலும் ஒரே நிலையில் தான் இருப்பான். எதற்கும் அஞ்சமாட்டான். திருமலையில் இவனுடைய சாதனைகளில் முதல் சாதனையாக, வீரமரணமடைந்த லெப். கேர்ணல் புலேந்திரன் தலைமையில் பராக்கிரமபுரத்தில் சிறீலங்கா இராணு வத்திற்கு எதிரான மோதலில் பங்குபற்றினான். இதில் எம்மவர்கள் ஐங்கரன், கடாபி ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவன் பங்குபற்றிய தாக்குதல்களில் 85–இல் குச்சவெளி போலீஸ் நிலையத் தாக்குதல், சிறீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதல் என்பன குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 1987–ம் ஆண்டு இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் போது யாழ்ப்பாணத்தில் சில நாட்கள் தங்கினான். வீரமரணமடைந்த லெப். கேர்ணல் புலேந்திரனின் இறுதிச் சடங்கை இவன் முன்னின்று நடத்தினான்.

இதற்கிடையில் எமது வீரர் பன்னிரண்டு பேரின் வீரமரணத்தின் எதிரொலியாக இந்திய இராணுவத்தடன் மோதல்கள் ஆரம்பமானவுடன் தன்னுடைய தோழர்க ளுடன் திருமலையை நோக்கித் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்தான். இதற்கிடையில் புதுக்கோட்டைச் சந்தியில் (புத்தூர்) எதிர்பாராதவிதமாக இந்திய இராணுவத்தின் மூர்க்கத்தனமான தாக்குதலில் இருந்து வெற்றிகரமாகத் திருமலை சென்ற அவன் முதன் முதலாக அங்கு நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்தான். அதில் கப்டன். அத்தான் (குமார்) வீரமரணமடைந்தான். இந்தத் தாக்குதலில் மிதிக்கண்ணிவெடிகள் (I.P.K.F. இனரால் வைக்கப்பட்டவை) சிலவற்றைக் கண்டெடுத்தான். இப்படித் தமிழின விடுதலைக்காக ஒவ்வொரு அடியையும் நிதானமாக வைத்தான். இவன் எடுக்கும் முடிவுகள் நிதானத்துடன் இருக்கும். பதட்டம் என்பது இவனிடம் துளிகூட இல்லை. அருகில் இராணுவம் என்றாலும் பயப்படாமலும், பதட்டப்படாமலும் கையில் ஆயுதம் ஏதும் இல்லையென்றாலும் முன்னேறுவான். நண்பர்களைக் கேலி செய்வதென்றால் இவனுக்குப் பிடிக்கும். இவனையும் சக போராளிகள் கேலி செய்வார்கள். கடைசி நேரத்திலும் நீண்டகாலப் போராட்டத்திற்கு உணவுப் பொருட்களைச் சேர்த்தவண்ணம் இருந்தான்.

**அவனுடைய செயல்கள், நினைவு கள் எமது நெஞ்சை விட்டு என்றும் அழியாது! அவ் இலட்சியம் நிறைவேற நாம் அவன் விட்டுச் சென்ற பணியில் எம் தலைவனின் வழி நின்று செயற்பட்டு தமிழீழத்தை வென்றெ டுப்போம்.** ◆

# உயிர்த்தெழுதல்

வீழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

விண்ணின் குண்டுகள்
வீழ்த்திய எங்கள்
மண்ணின் மரங்கள்
மறுபடி தழைத்தன !
நெடுங்கடற் கரையில்
நேற்றும் புலிகள்
சுடுங்குரல் கேட்டோம்....
தோள் சிலிர்த்தது !

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

தண்ணீர் விட்டோ
எரிமலை தணியும்?
விண்ணின் புயலை
வேலி தடுக்குமோ ?
கடலைக் குடிக்க
நினைத்தவன் யாரடா?
அட ! இங்கெம்மை
அழிக்கவும் கூடுமோ?

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

கல்லறை களுக்கும்
உயிர் இங்குள்ளதால்
கொல்வார் கொலை வெறி
இங்கெடு படாது !
பந்தி பந்தியாய்
உயிர் அழியலாம்....
செந்தமிழ் ஈழம்
செத்துவிடாது !

விழ விழ எழுவோம் !
விழ விழ எழுவோம் !
ஒன்று விழ நாங்கள்
ஒன்பதாய் எழுவோம் !

– காசி ஆனந்தன்